Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)



2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 207 | உள்ளூர் - 26.07.2026 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 207 | வெளியூர் - 27.07.2026 | திங்கட்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

**சனி நீச நிலை... அதிர்ஷ்டம் யாருக்கு?**

**ரயில்வேயில் 4,098 நிரந்தர வேலை வாய்ப்புகள்..!**

**பிரதமர் சாய்ஸ்! மத்திய கல்வித்துறை அமைச்சர் இவர்?**

**கோவை, மதுரை மெட்ரோ: மீண்டும் மறுப்பு!**

## இங்கிலாந்துக்கு ஈரான் நேரடி எச்சரிக்கை!

ஈரான், ஜூலை. 26–



இங்கிலாந்துக்கு ஈரான் நேரடியாக எச்சரிக்கை விடுத்து இருக்கிறது. சமீபத்தில் அமெரிக்காவின் குண்டுவீச்சு விமானங்கள் இங்கிலாந்தின் விமானத் தளங்களைப் பயன்படுத்தியதாக தகவல் வெளியான நிலையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

இதுதொடர்பாக ஈரானின் புரட்சிகர காவல் படையின் செய்தித் தொடர்பாளர் கூறியதாக ஈரானின் அரசு ஒலிபரப்பு நிறுவனமான ஐ.ஆர்.ஐ.பி செய்தி வெளியிட்டுள்ளது. அதில் ஈரானுடனான எந்தவொரு போரிலும் அமெரிக்காவை ஆதரித்தால் இங்கிலாந்து நிச்சயமான மற்றும் முறையான இலக்காக கருதப்படும். இது வளைகுடா நாடுகளுக்கும் பொருந்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் எந்தவொரு தாக்குதலில் இருந்தும் நாட்டை பாதுகாக்க ஆயுதப்படைகள் தயாராக உள்ளன என இங்கிலாந்து தெரிவித்துள்ளது. மேலும், சொந்த மண் அல்லது வெளிநாட்டு மண்ணிலும் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் என்றும் தெரிவித்துள்ளது.

ஈரான் அணு ஆயுதத்தை தயாரிப்பதாக கூறி அந்நாடு மீது அமெரிக்கா போரை தொடங்கியது. ஆனால் தாங்கள் அணு ஆயுதத்தை தயாரிக்கவில்லை என்று ஈரான் தெரிவித்தது. இந்த நிலையில் ஈரானின் புதிய உச்ச தலைவரான மொஜ்தபா கமேனி, அணு ஆயுதங்களைத் தயாரிப்பதில் அதிக ஆர்வம் கொண்டவர் என்று அமெரிக்க உளவுத்துறை கருதுவதாக நியூயார்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. உளவுத் தகவல்கள் மற்றும் இடைமறிக்கப்பட்ட உரையாடல்களின் அடிப்படையில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

அமெரிக்க தாக்குதலில் கொல்லப்பட்ட அயதுல்லா அலி கமேனியுடன் ஒப்பிடும்போது அணு ஆயுதங்களை உருவாக்குவதில் அவரது மகனான மொஜ்தபா கமேனி குறைவான தயக்கமே கொண்டிருப்பதாக அந்த உளவுத்தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சவுதி அரேபியாவுக்கும், ஏமனில் செயல்படும் ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும் மோதல் நடந்து வருகிறது. இதற்கிடையே செங்கடல் உடன்கையில் உள்ள சவுதி அரேபியாவின் எண்ணெய் நிலையங்களை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தினார்கள்.

இதற்கிடையே யான்பு வில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களைக் குறிவைத்து ஏமனில் இருந்து ஏவப்பட்ட 2 பாலிஸ்டிக் ஏவுகணைகளை இடைமறித்ததாக சவுதி அரேபியா தெரிவித்து உள்ளது.

மத்திய கிழக்கில் ஏற்பட்டு உள்ள பதற்றமான சூழலுக்கு மத்தியில் தெற்கு லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி உள்ளது. கப்ர்ட்பெனிட், மிஸ்ரா, பெய்ட் யஹுன், குனின் ஆகிய கிராமங்கள் மீது பிரங்கி குண்டு தாக்குதல் நடத்தப்பட்டன. மேலும் மார்க்கபா நகரம் மற்றும் அலி அல்–தாஹெர் மலைப்பகுதிகள் மீதும் குண்டுகள் வீசப்பட்டன.

## கார்கில் வீரர்களுக்கு வீரவணக்கம்; பிரதமர் மோடி!



புதுடெல்லி, ஜூலை 26–


கார்கில் வெற்றி தினத்தை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி, சமூக வலைதளமான எக்ஸ் (X) தளத்தில் இந்திய ராணுவ வீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தினார்.

அவர் வெளியிட்ட பதிவில், "கார்கில் வெற்றி தினத்தில், இந்தியாவின் பாதுகாப்புக்காக அசாதாரண தைரியத்துடனும் அர்ப்பணிப்புடனும் போராடிய வீரர்களுக்கு நாடு முழுவதும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மிகக் கடினமான சூழலிலும் அவர்கள் வெளிப்படுத்திய வீரமும், தேசப்பற்றும், கடமை உணர்வும் தலைமுறைகளுக்கு தொடர்ந்து ஊக்கமளிக்கும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

## வினாத்தாள் முறைகேடு சட்டத் திருத்த மசோதா தாக்கல்?

புதுடெல்லி, ஜூலை. 26–



நீட் போன்ற வினாத்தாள் கசிவை தடுக்க, பொதுத் தேர்வுகள் (முறையற்ற வழிமுறைகளைத் தடுத்தல்) சட்டம்–2024 திருத்த மசோதா மக்களவையில் நாளை (27.07.2026) தாக்கல் செய்யப்பட உள்ளது. இதையொட்டி, மக்களவை உறுப்பினர்களுக்கு அந்த மசோதா நகல் விநியோகிக்கப்பட்டது.

அதில் கூறியிருப்பதாவது:–


வினாத்தாள் கசிவு அல்லது தேர்வு முறைகேடுகளில் ஈடுபடுபவர்களுக்கு குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், அதிகபட்சமாக 10 ஆண்டுகள் வரையும் சிறைத் தண்டனை வழங்கப்படும். அதனுடன், ரூ. 50 லட்சம் வரை அபராதமும் விதிக்கப்படும். இதில், திட்டமிட்டு குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு குறைந்தபட்சம் 7 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ. 10 கோடி வரை அபராதமும் விதிக்கப்படும்.

வினாத்தாள் கசிவு அல்லது தேர்வு முறைகேடுகள் தொடர்பான வழக்கு விசாரணையை விரைந்து மேற்கொள்ள வசதியாக, அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் விரைவு நீதிமன்றங்களை அமைக்க வேண்டும். இந்த விரைவு நீதிமன்றங்களில் வழக்கு மீது உடனடியாக விசாரணை தொடங்கி தினசரி அடிப்படையில் மேற்கொள்வதோடு, குற்றபத்திரிகை தாக்கல் செய்த 3 மாதங்களுக்குள் விசாரணை முடிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வினாத்தாள் கசிவு, தேர்வு முறைகேடு குற்றங்களை விரைந்து விசாரிப்பதற்காக, எந்தவொரு அமர்வு நீதிமன்றத்தையும் சிறப்பு விரைவு நீதிமன்றமாக மாற்றியமைக்கவும் அனைத்து மாநில அரசுகளுக்கு இந்த சட்டத் திருத்த மசோதா அதிகாரம் அளிக்கிறது.

## கணித உலகின் உயரிய விருது: 100 ஆண்டுகால புதிருக்கு விடை கண்டுபிடித்த சீன விஞ்ஞானிகள்!

வாஷிங்டன், ஜூலை. 26–



உலக அளவில் கணிதத் துறையின் உயரிய விருதான 'பீல்ட்ஸ் மெடல்' அமெரிக்காவில் வழங்கப்பட்டது. 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை 40 வயதுக்குட்பட்டவர்களுக்கு வழங்கப்படும் இந்த விருதை, முதன்முறையாக 2 சீன அறிஞர்கள் வென்று சாதனை படைத்துள்ளனர். சீனாவின் யு டெங் மற்றும் சீனாவில் பிறந்த பெண் விஞ்ஞானி ஹாங் வாங் ஆகியோரே இந்த விருதை தட்டிச் சென்றுள்ளனர்.

இதன்மூலம் 90 ஆண்டுகால இந்த விருது வரலாற்றில், விருதைப் பெறும் 3–வது பெண்மணி என்ற பெருமையை ஹாங் வாங் பெற்றுள்ளார். 1900–ம் ஆண்டு ஜெர்மனி விஞ்ஞானி டேவிட் ஹில்பர்ட் முன்வைத்த வாயுக்களின் இயக்கம் குறித்த 100 ஆண்டுகால புதிருக்கு யு டெங் விடை கண்டுள்ளார்.

அதேபோல், 1917–ம் ஆண்டு ஜப்பான் விஞ்ஞானி சோய்ச்சி ககேயா எழுப்பிய கணித புதிருக்கு ஹாங் வாங் முப்பரிமாண வடிவில் தீர்வு கண்டு உலகை வியக்க வைத்துள்ளார். இவர்களுடன் அமெரிக்காவின் ஜான் பார்டன், கனடா வின் ஜேக்கப் சிம்மர்மன் ஆகியோரும் இந்த விருதை பெற்றுள்ளனர்.

## பிரதமர் மோடியின் 136–வது 'மன் கி பாத்'

# கார்கில் வீரர்களுக்கு வீரவணக்கம்!

# 'ஹர் கர் திரங்கா'

## மக்கள் எழுச்சிக்கு அழைப்பு!!




புதுடெல்லி, ஜூலை 26–

பிரதமர் நரேந்திர மோடி, ஞாயிற்றுக்கிழமை தனது 136–வது 'மன் கி பாத்' வானொலி நிகழ்ச்சியில் நாட்டு மக்களிடம் உரையாற்றினார். கார்கில் வெற்றி தினத்தை முன்னிட்டு உயிர்நீத்த இந்திய ராணுவ வீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்திய அவர், அவர்களின் தியாக வரலாற்றை இளம் தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு நடைபெறும் 'ஹர் கர் திரங்கா' இயக்கத்தில் அனைவரும் தங்கள் வீடுகளில் தேசியக் கொடியை மரியாதையுடன் ஏற்றி பங்கேற்க வேண்டும் என அவர் அழைப்பு விடுத்தார். வரவிருக்கும் சுதந்திர தின கொண்டாட்டங்கள் குறித்த கருத்துகளை MyGov தளத்தில் பகிருமாறும் கேட்டுக் கொண்டார்.

நாட்டில் மழைநீர் சேமிப்பை மக்கள் இயக்கமாக மாற்றியுள்ள 'Catch the Rain' திட்டத்தை பாராட்டிய பிரதமர், ஒவ்வொரு துளி நீரையும் பாதுகாப்பது எதிர்கால இந்தியாவுக்கு மிகவும் அவசியம் என்றார்.

மேலும், உள்நாட்டு தொழில்நுட்பம், விண்வெளித் துறையில் இந்தியா வேகமாக முன்னேறி வருவதாகக் குறிப்பிட்ட அவர், விக்ரம்–1 ராக்கெட் உள்ளிட்ட சாதனைகளைப் பாராட்டினார். ஜப்பான் ஓபன் பட்டம் வென்ற பேட்மிண்டன் வீராங்கனை பி.வி. சிந்துவுக்கும் வாழ்த்து தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பு, தன்னிறைவு தொழில்நுட்பம், நீர் பாதுகாப்பு, தேசிய ஒற்றுமை மற்றும் இளைஞர்களின் பங்களிப்பு ஆகியவை இந்தியாவின் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமையும் என்றும் பிரதமர் மோடி தனது உரையில் வலியுறுத்தினார்.

## அடுத்த கேபினட் செயலர் யார்?

புதுடில்லி, ஜூலை. 26–



டில்லி அதிகாரிகள் வட்டாரங்களில், ஒரு விஷயம் பரபரப்பாக விவாதிக்கப்படுகிறது. அது, 'அடுத்த கேபினட் செயலர் யார்?' என்பதே. கேபினட் செயலர் என்பவர், நாட்டிலுள்ள அனைத்து ஐ.ஏ.எஸ்., அதிகாரிகளுக்கும் தலைவர். இந்திய அரசில் என்ன நடக்கிறது, உளவுத்துறை மற்றும் 'ரா' அமைப்பு எப்படி செயல்படுகிறது என, அனைத்து விபரங்களையும் அறிந்து வைத்திருப்பார். அத்துடன், பிரதமருக்கும் நெருக்கமாக இருப்பார்.

தற்போது, கேபினட் செயலராக உள்ள, தமிழரான டி.வி. சோமநாதன், அடுத்த மாத இறுதியில் ஓய்வு பெறுகிறார். இந்த பதவியில் உள்ளவர்களுக்கு, பதவி நீட்டிப்பு வழங்குவது வழக்கம். ஆனால், 'எனக்கு பணி நீட்டிப்பு வேண்டாம்' என பிரதமரிடம், சோமநாதன் சொல்லிவிட்டதாக பேசப்படுகிறது.

தற்போது, 'நீட்' விவகாரத்தில் நடைபெறும் போராட்டத்திற்கு, தீர்வு காண சிறப்பு விரைவு நீதிமன்றம் அமைக்கப்படும் என்ற மசோதாவை, இரண்டே நாளில் தயார் செய்ய உதவியவர், கேபினட் செயலர். இவர் பணி நீட்டிப்பு வேண்டாம் என கூறினாலும், இப்போதுள்ள சூழ்நிலையில், இவருக்கு பதவி நீட்டிப்பு கிடைக்கலாம் என கூறப்படுகிறது.

ஒரு வேளை, இவருக்கு நீட்டிப்பு கிடைக்காவிட்டால், யார் இந்த பதவிக்கு வருவார்? இதற்கான பரிசீலனை பட்டியலில், சரண்யன் கிருஷ்ணன் மற்றும் கோவிந்த் மோகன் ஆகியோரின் பெயர்கள் உள்ளன. இதில், தமிழக அதிகாரியான, சரண்யன் கிருஷ்ணன், மத்திய அரசின் முக்கியத் துறையான, மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் செயலராக பணியாற்றி வருகிறார்.

'ஏ.ஐ.,' எனப்படும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் தொடர்பாக பல விஷயங்களை இவர் செய்துள்ளார். இவரும் பிரதமருக்கு நெருக்கமானவர் என அறியப்படுகிறார். கோவிந்த் மோகன் தற்போது, உள்துறை செயலராக இருப்பவர். பல இக்கட்டான தருணங்களில் மத்திய அரசுக்கு முக்கிய ஆலோசனைகளை வழங்கிய இவரும் கேபினட் செயலராக வாய்ப்புள்ளது என பேசப்படுகிறது. இந்த வார இறுதி அல்லது ஆகஸ்ட் முதல் வாரத்தில் கேபினட் செயலர் யார் என்பதை மத்திய அரசு அறிவிக்கும்.

## நிலவுக்கும்... செவ்வாய்க்கும் மனிதர்களை ஏற்றிச் செல்லும் ராக்கெட் சோதனை வெற்றி!

வாஷிங்டன், ஜூலை 26–



எதிர்காலத்தில் மனிதர்களை நிலவு மற்றும் செவ்வாய் கிரகங்களுக்கு அழைத்துச் செல்லும் நோக்கில் உருவாக்கப்பட்ட புதிய ராக்கெட்டின் முக்கிய சோதனை வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது.

இந்தச் சோதனையில் ராக்கெட்டின் இயக்கத் திறன், பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் மனிதர்கள் பயணிக்கும் விண்கலத்தை ஏவுவதற்கான முக்கிய தொழில்நுட்பங்கள் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வெற்றி, எதிர்கால மனித விண்வெளி ஆய்வு திட்டங்களில் முக்கிய மைல்கல்லாகக் கருதப்படுகிறது. நிலவுக்கு மீண்டும் மனிதர்களை அனுப்பும் திட்டங்களும், அடுத்த கட்டமாக செவ்வாய் கிரகத்துக்கு மனிதர்களை அனுப்பும் முயற்சிகளும் உலகளவில் வேகமெடுத்து வரும் நிலையில், இந்த வெற்றிகரமான ராக்கெட் சோதனை புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த தொழில்நுட்பம் முழுமையாக செயல்பாட்டுக்கு வந்தால், மனிதர்களின் நீண்டதூர விண்வெளி பயணங்களில் புதிய அத்தியாயம் தொடங்கும் என விண்வெளி நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

தலையங்கம்
மதுரை மணி
ஞாயிற்றுக்கிழமை 26.07.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆடி மாதம் 10-ம் தேதி

## இளைஞர் எழுச்சியின் வெற்றி; அரசின் பொறுப்புணர்வின் தொடக்கமா?




நீட் வினாத்தாள் கசிவு விவகாரம் கல்வி அமைப்பின் மீதான நம்பிக்கையை மட்டுமல்ல, இளைஞர்களின் மனநிலையையும் கடுமையாக பாதித்துள்ளது. இந்தச் சூழலில் மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகியிருப்பது சாதாரண அரசியல் நிகழ்வாகக் கருத முடியாது. மோடி தலைமையிலான ஆட்சியில், மக்கள் அழுத்தத்தால் ஒரு மத்திய அமைச்சர் பதவி விலகியிருப்பது குறிப்பிடத்தக்க அரசியல் திருப்பமாக பார்க்கப்படுகிறது.

போராட்டம் என்பது ஜனநாயகத்தின் உரிமை. ஆனால், அந்தப் போராட்டம் பொதுமக்களின் ஆதரவைப் பெற வேண்டுமெனில் அதன் நோக்கமும், வழிமுறையும் நியாயமானதாக இருக்க வேண்டும். நீட் விவகாரத்தில் மாணவர்களின் கோபம் வெறும் தேர்வை எதிர்ப்பதற்காக அல்ல; தேர்வு முறையின் நம்பகத்தன்மை சிதைந்ததற்கும், எதிர்காலம் கேள்விக்குறியாகியதற்கும் எதிரான குரலாகவே அது வெளிப்பட்டது.

அமைச்சரின் ராஜினாமா ஒரு முடிவல்ல; அது பொறுப்பேற்பின் முதல் படி மட்டுமே. வினாத்தாள் கசிவுக்கு காரணமானவர்களுக்கு விரைவாக தண்டனை வழங்கப்பட வேண்டும். பிரதமர் அறிவித்துள்ள விரைவு நீதிமன்றங்கள் விரைவில் செயல்பட்டு, குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். அதேபோல், மாணவர்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கும் வகையில் தேர்வு நடைமுறைகளிலும் சீர்திருத்தங்கள் அவசியம்.

அதே நேரத்தில், எந்தவொரு போராட்டமும் சட்டம் ஒழுங்கை பாதிக்காத வகையில் நடைபெற வேண்டும். அரசும் போராட்டக்காரர்களும் உரையாடல் மூலமே தீர்வை எட்ட வேண்டும். பதவி விலகல் போன்ற அரசியல் முடிவுகளை விட, கல்வி அமைப்பில் நிலையான மாற்றத்தை ஏற்படுத்துவதே மாணவர்களுக்கு கிடைக்கும் உண்மையான வெற்றியாகும்.

ஜனநாயகத்தில் மக்களின் குரல் கேட்கப்பட வேண்டும்; அதே நேரத்தில் அந்தக் குரல் நிலையான மாற்றத்தை உருவாக்க வேண்டும். அதுவே இந்த நிகழ்வு நாட்டிற்கு சொல்லும் மிகப் பெரிய பாடமாகும்.




இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பில் திருப்பூர் குமரன் சிலை முன்பு முன்னாள் சேர்மன் முன்னாள் மாவட்ட தலைவர் ஆர் கிருஷ்ணன் தலைமையில் நீட் தேர்வை ரத்து செய்யக் கோரியும் கேள்வித்தாள் கசிவு குறித்து முழுமையான விசாரணை நடத்த கோரி மெழுகுவர்த்தி பேரணி நடைபெற்றது இதில் மாமன்ற உறுப்பினர் திருமதி விஜயலட்சுமி கோபால்சாமி, முன்னாள் துணை மேயர் செந்தில்குமார், மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

## குற்றாலத்தில் குவிந்த சுற்றுலா பயணிகள்: அருவிகளில் ஆனந்த குளியல்!



தென்காசி, ஜூலை. 26–

ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால் காலை முதலே மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றால அருவிகளில் சுற்றுலா பயணிகளின் கூட்டம் நிரம்பி வழிந்தது. வெளியூர்களில் இருந்து கார், வேன், ஆட்டோ, பஸ் உள்ளிட்ட வாகனங்களில் அதிக அளவில் சுற்றுலா பயணிகள் குடும்பமாக வருகை புரிந்தனர். அவர்கள் அருவிகளில் உற்சாகமாக குளித்துவிட்டு குற்றாலத்தில் உள்ள பூங்கா பகுதி மற்றும் அருவி கரைகளுக்கு செல்லும் சாலை ஓரப் பகுதிகளில் உள்ள மர நிழல்களில் அமர்ந்து குடும்பமாக உணவு உண்டு மகிழ்ந்து நேரத்தை செலவிட்டனர். மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதிகளில் கடந்த சில நாட்களாக மழை இல்லை. இதனால் அருவிகளுக்கு வரும் நீரின் அளவும் கனிசமாக குறைந்துள்ளது. எனினும், சுற்றுலா பயணிகள் குறைவாக வரும் தண்ணீரில் ஆனந்தமாக குளித்து மகிழ்ந்து வருகின்றனர். சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிகரித்துள்ளதால் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## தமிழகத்தில் டாஸ்மாக் பார் தொடங்குவதற்கான விதிமுறைகளில் தளர்வு!




சென்னை, ஜூலை. 26–

தமிழகத்தில் டாஸ்மாக் மதுக்கடைகளுடன் இணைந்து இயங்கும் பார்களைத் தொடங்குவது மற்றும் உரிமம் வழங்குவது தொடர்பாகப் புதிய தளர்வுகளையும் விதிமுறை மாற்றங்களையும் டாஸ்மாக் நிர்வாகம் அறிவித்துள்ளது..

அதன்படி, இதுவரை டாஸ்மாக் மதுக்கடையை ஒட்டியே (இணைந்தே) பார் தொடங்க அனுமதிக்கப்பட்டு வந்த நிலையில், இனி மதுக்கடையில் இருந்து 100 மீட்டர் சுற்றளவுக்குள் பார்களைத் அமைத்துக் கொள்ள அனுமதி அளிக்கப்பட உள்ளது பார் அமைப்பதற்கான குறைந்தபட்ச இடத்தின் பரப்பளவு '15 சதுர மீட்டரில் இருந்து 20 சதுர மீட்டராக' உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் பார்களில் கூடுதல் இடவசதி மற்றும் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய டெண்டர் மற்றும் தளர்வு விதிமுறைகளின் மூலம் குறிப்பிட்ட நபர்கள் அல்லது குறிப்பிட்ட ஒப்பந்ததாரர்கள் மட்டுமே தொடர்ந்து பார் நடத்தும் பழைய நடைமுறை மாற்றப்பட்டு, புதிய நபர்களுக்கும் ஏலம்/டெண்டரில் பங்கேற்க வாய்ப்பு உருவாகும் எனக் எதிர்பார்க்கப்படுகிறது. டாஸ்மாக் பார்களுக்கான பழைய உரிமக் காலம் அண்மையில் நிறைவடைந்த நிலையில், புதிய டெண்டர் விதிமுறைகளை இறுதி செய்யும் வரை தற்காலிகமாக பார்களின் இயக்கம் நீட்டிக்கப்பட்டிருந்தது.

பார் அமைப்பதற்கான இட அமைப்பில் தளர்வுகள் தரப்பட்டாலும், பார்களில் பீடி–சிகரெட் விற்பனைக்கான தடை, சிற்றுண்டி மற்றும் குடிநீரை அதிக விலைக்கு விற்கக் கூடாது போன்ற இதர கட்டுப்பாடுகள் தொடர்ந்து தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

## கூட்டுறவுத்துறை சார்ந்த கோரிக்கை மனுக்களுக்கு உடனடி தீர்வு!




சென்னை, ஜூலை. 26–

கூட்டுறவு துறை சார்ந்த கோரிக்கை மீது நடவடிக்கை மேற்கொள்ள தமிழக அரசு வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது. அதன்படி வட்டார அளவில் கூட்டுறவு சார் பதிவாளர் அலுவலர்கள் மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமை அன்று பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்று அவற்றை தகுதியின் அடிப்படையில் பரிசீலித்து தீர்வு காண வேண்டும் என்றும், கூட்டுறவு பதிவாளர் மற்றும் கள அலுவலர் அளவில் தீர்வு காண இயலாத கோரிக்கை மனுக்களையும் துணை பதிவாளர்களால் நேரடியாக பெறப்படும் கோரிக்கை மனுக்களையும் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது வெள்ளிக்கிழமை அன்று தகுதியின் அடிப்படையில் பரிசீலித்து தீர்வு காணவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அதேபோல் தீர்வு காண முடியாத கோரிக்கை மனுக்களையும் மண்டல இணை பதிவாளர்களால் நேரடியாக பெறப்படும் மனுக்களையும் மாதம்தோறும் மூன்றாவது வெள்ளிக்கிழமை என்று மண்டல இணைப்பதிவாளர்கள் தகுதியின் அடிப்படையில் பரிசீலித்து தீர்வு காண அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. உடனுக்குடன் தீர்வு காணப்பட்ட மனுக்கள் குறித்த மாதாந்திர அறிக்கையை அனுப்பவும் உத்தரவிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## கன்னட அமைப்பு ஆர்ப்பாட்டம்: பேருந்துகள் நிறுத்தம்..!




ஓசூர், ஜூலை. 26–

காவிரி விவகாரத்தில் எல்லைப் பகுதியில் கன்னட அமைப்புகள் ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளதால், தமிழ்நாட்டிலிருந்து கர்நாடகா நோக்கிச் செல்லும் பேருந்துகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஓசூர் எல்லை பேருந்து நிலையத்திலேயே நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் பயணிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். அதேவேளையில், கர்நாடகாவிலிருந்து தமிழ்நாடு நோக்கி வரும் பேருந்துகள் வழக்கம்போல தடையின்றி இயங்கி வருகின்றன.

மற்றபடி கார், சரக்கு வாகனங்கள் வழக்கமாக சென்று வருகின்றன. ஓசூரிலிருந்து கர்நாடகாவுக்குச் செல்லும் பயணிகள் தமிழக மாநில எல்லை வரை செல்லும்நகரப்பேருந்துகளில் சென்று அங்கிருந்து ஆட்டோக்கள் மூலம் அத்திப்பள்ளிக்குச் சென்று பின்னர் அங்கிருந்து பெங்களூரு செல்கின்றனர். மேலும் தமிழக–கர்நாடக எல்லையில் போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

## கோவை, மதுரை மெட்ரோ: மீண்டும் மறுப்பு!




சென்னை, ஜூலை 26–

கோவை மற்றும் மதுரை மாநகரங்களுக்கான மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு மத்திய அரசு மீண்டும் ஒப்புதல் மறுத்திருப்பது தமிழகத்தில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே மக்கள் தொகை அடிப்படையில் ஒருமுறை நிராகரிக்கப்பட்ட இந்தத் திட்டம், தமிழக அரசு புதிய தரவுகளுடன் மீண்டும் சமர்ப்பித்த நிலையிலும், இரண்டாவது முறையாகவும் மத்திய அரசின் ஒப்புதலை பெறவில்லை.

கோவை, மதுரை நகரங்களில் மெட்ரோ திட்டம் அவசியம் என்பதை வலியுறுத்தி, மே மாதத்தில் தமிழக அரசு விரிவான அறிக்கையை மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்திற்கு அனுப்பியது. அதில் இரு நகரங்களின் தொழில், வர்த்தகம், கல்வி, சுற்றுலா வளர்ச்சி மற்றும் எதிர்கால போக்குவரத்து தேவைகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டிருந்தது. ஆனால், அந்த அறிக்கையை ஆய்வு செய்த மத்திய அரசு, 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இரு நகரங்களின் மக்கள் தொகையும் 20 லட்சத்திற்கும் குறைவாக இருப்பதுடன், மெட்ரோ திட்டம் போக்குவரத்து நேரத்தை கணிசமாக குறைக்கும் என்பதற்கான போதுமான ஆதாரங்கள் இல்லை என்று தெரிவித்துள்ளது.

இதற்கு மாற்றாக, BRTS (Bus Rapid Transit System) எனப்படும் அதிவேக பேருந்து போக்குவரத்து திட்டத்தை செயல்படுத்துமாறு மத்திய அரசு பரிந்துரைத்துள்ளது. இந்த திட்டத்தின் மூலம் தனிப்பட்ட பேருந்து வழித்தடங்கள், மேம்பாலங்கள் உள்ளிட்ட வசதிகளை உருவாக்கி போக்குவரத்து நெரிசலை குறைக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், கடந்த சில ஆண்டுகளில் ஆக்ரா, போபால், பாட்னா, இந்தோர், ஜெய்ப்பூர் உள்ளிட்ட நகரங்களுக்கு மெட்ரோ திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கிய நிலையில், தொழில் மற்றும் முதலீட்டு மையமாக விளங்கும் கோவை, சுற்றுலா மற்றும் வளர்ந்து வரும் தொழில் நகரமான மதுரைக்கு ஒப்புதல் மறுக்கப்பட்டிருப்பது குறித்து கேள்விகள் எழுந்துள்ளன. தமிழகத்தில் புதிய அரசு பொறுப்பேற்றுள்ள நிலையில், கோவை மற்றும் மதுரை மெட்ரோ திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதலைப் பெற என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பது அரசியல் மற்றும் தொழில் வட்டாரங்களில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

## சிவகாசி பட்டாசு வெடி விபத்து - பலி 2



விருதுநகர், ஜூலை. 26–

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே செங்கமலப்பட்டி மற்றும் நாராயணபுரம் பகுதிகளில் சட்டவிரோதமாகத் தகர கொட்டகை அமைத்து பட்டாசு தயாரிக்கும் பணி நடைபெற்று வந்தது. இந்நிலையில், இன்று காலை வழக்கம்போல் தொழிலாளர்கள் பட்டாசு தயாரிக்கம் பணியில் ஈடுபட்டிருந்தபோது பட்டாசு குடோனில் திடீரென வெடிவிபத்து ஏற்பட்டது. பயங்கர சத்தத்துடன் பட்டாசுகள் வெடித்து சிதறியதால், விண்ணை முட்டும் அளவிற்கு அடர்ந்த கரும்புகை வெளியேறியது. இந்த விபத்தின் காரணமாகச் சுற்றுவட்டாரத்தில் சுமார் 5 கிலோமீட்டர் தூரத்திற்குப் பலத்த அதிர்வு உணரப்பட்டதாக அப்பகுதி மக்கள் கூறினர். விபத்து குறித்து அந்த பகுதி மக்கள் தீயணைப்புத்துறைக்கு தகவல் தெரிவித்தனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்புத் துறை, போலீசார், தண்ணீரை கொண்டு பீச்சியடித்து தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். பின்னர் குடோனில் ஈடுபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். இவ்விபத்தில் 2 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். ஒருவர் 90% தீக்காயங்களுடன் மீட்கப்பட்ட நிலையில், மேலும் பலர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து மீட்பு பணி நடந்து வருகிறது. இந்த விபத்து குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதைபோல சிவகாசி அருகே பேர்நாயக்கன்பட்டியில் ஜெய் விநாயகா கம்பி மத்தாப்பு பட்டாசு ஆலையில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. மின்கசிவு காரணமாக காகித அட்டைகளில் தீப்பிடித்ததாக கூறப்படுகிறது.



## 30 ஆண்டுகளுக்குப் பிறகு சனி நீச நிலை... அதிர்ஷ்டம் யாருக்கு?



வேத ஜோதிடத்தின்படி, தற்போது மீன ராசியில் சஞ்சரிக்கும் சனி பகவான், 2027 ஜூன் 3 அன்று மேஷ ராசிக்கு பெயர்ச்சி பெற்று நீச (பலவீன) நிலையை அடைய உள்ளார்.

சனி 30 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே மீண்டும் அதே ராசிக்கு வருவதால், இந்த பெயர்ச்சி முக்கியமானதாக கருதப்படுகிறது. இந்த மாற்றம் சில ராசிக்காரர்களுக்கு நிதி, தொழில் மற்றும் குடும்ப வாழ்க்கையில் சாதகமான பலன்களை அளிக்கும் என ஜோதிடர்கள் கூறுகின்றனர். இந்த மாற்றம் மிதுனம், சிம்மம், தனுசு, கும்பம் உள்ளிட்ட சில ராசிக்காரர்களுக்கு நிதி, தொழில், வியாபாரம் மற்றும் வேலைவாய்ப்பில் முன்னேற்றம் தரும் என ஜோதிடர்கள் கூறுகின்றனர்.

**ராசி பலன்கள் சுருக்கமாக:**

**மிதுனம்:** வருமானம் அதிகரிப்பு, முதலீட்டில் லாபம், தொழிலில் முன்னேற்றம், வெளிநாட்டு வாய்ப்புகள்.

**சிம்மம்:** தேங்கிய பணிகள் நிறைவு, பணவரவு, புதிய முதலீடுகள், வீடுநிலம் வாங்கும் யோகம்.

**தனுசு:** வேலை, வியாபார வளர்ச்சி, பதவி உயர்வு, சம்பள உயர்வு, மாணவர்களுக்கு வெற்றி.

**கும்பம்:** புதிய வாய்ப்புகள், நிதி முன்னேற்றம், சேமிப்பு அதிகரிப்பு, தொழிலில் லாபம்.

**குறிப்பு:** இவை ஜோதிட நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட கணிப்புகள் மட்டுமே; அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டவை அல்ல.

## உணவு டெலிவரி சேவையிலும் களமிறங்கும் பிளிப்கார்ட்... விரைவில் அறிமுகம்!




பெங்களூரு, ஜூலை 26–

இ–காமர்ஸ் துறையில் முன்னணி நிறுவனமான பிளிப்கார்ட், ஆன்லைன் உணவு டெலிவரி சேவையிலும் களமிறங்கத் தயாராகி வருகிறது. இந்த சேவையை அடுத்த 30 நாட்களுக்குள் பெங்களூருவில் சோதனை அடிப்படையில் அறிமுகப்படுத்த நிறுவனம் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த உணவு டெலிவரி சேவையை பிளிப்கார்ட்டின் தற்போதைய பிரதான செயலி மூலமும், இதற்காக உருவாக்கப்படும் புதிய செயலி மூலமும் வழங்க நிறுவனம் திட்டமிட்டுள்ளது. சோதனை கட்டத்தில் வாடிக்கையாளர்களின் கருத்துகளைப் பெற்ற பிறகு நாடு முழுவதும் விரிவுபடுத்த முடிவு செய்யப்பட உள்ளது.

இந்தியாவின் ஆன்லைன் உணவு டெலிவரி சந்தையில் தற்போது ஸ்விக்கி மற்றும் ஜொமாட்டோ நிறுவனங்கள் முன்னிலை வகித்து வருகின்றன. இந்த நிலையில், பிளிப்கார்ட்டின் வருகையால் போட்டி மேலும் தீவிரமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. வாடிக்கையாளர்களுக்கு சிறந்த மதிப்புள்ள சேவையை வழங்க முடிந்தால், தாமதமாக வந்தாலும் சந்தையில் இடம்பிடிக்க முடியும் என்று பிளிப்கார்ட் குழுமத்தின் தலைமை செயல் அதிகாரி கல்யாண் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## கோவை கோனியம்மன் கோவில் ஊழியர்கள், அதிகாரிகள் என 8 பேர் சஸ்பெண்ட்!



கோவை, ஜூலை. 26–

கோவை கோனியம்மன் கோவிலில் உண்டியல் காணிக்கை எண்ணும் பணியின் போது ஒரு உண்டியலை அங்குள்ள ஊழியர்கள் திருடியுள்ளனர். பணம் கையாடல் செய்யப்பட்ட விவகாரத்தில், முறைகேட்டில் ஈடுபட்ட ஊழியர்கள் மற்றும் கவனக்குறைவாக செயல்பட்ட அதிகாரிகள் என மொத்தம் 8 பேர் பணியிடை நீக்கம் (சஸ்பெண்ட்) செய்யப்பட்டுள்ளனர். இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் அவர்களின் உத்தரவின்பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கோனியம்மன் கோவிலில் வேலை செய்து வந்த ஊழியர்கள் பாலசுப்ரமணியன், சரவணன், பிரதீப் குமார், கிருஷ்ணராஜ் ஆகிய 4 பேரும் அதை கண்டுபிடிக்காமல் உடந்தையாக இருந்த அதிகாரிகள் ராம்குமார், உதயகுமார், குமார், உஷா நந்தினி என இவர்கள் 4 பேரையும் சேர்த்து மொத்தமாக 8 பேரை அமைச்சர் ரமேஷ் சஸ்பெண்ட் செய்து உத்தரவிட்டுள்ளார்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்




உடல் வலி, சோர்வு போன்ற பிரச்சனைகளை சாதாரணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. ஃபிட்னஸ் கோச் டான் கோவின் கூற்றுப்படி, கீழ்க்கண்ட 7 அறிகுறிகள் தொடர்ந்து இருந்தால் உடல்நலப் பிரச்சனைக்கான எச்சரிக்கையாக இருக்கலாம்.

**இடுப்பு அளவு அதிகம்:** இடுப்பளவு, உயரத்தின் பாதியை விட அதிகமாக இருந்தால் உள்ளுறுப்பு கொழுப்பு அதிகரித்திருக்கலாம்.

**ஈறுகளில் இரத்தக்கசிவு:** பல் துலக்கும் போது இரத்தம் வந்தால் ஈறு அழற்சி அல்லது பல் ஆரோக்கியக் குறைபாடு இருக்கலாம்.

**கழுத்து, அக்குளில் சிறிய மருக்கள்:** இன்சுலின் எதிர்ப்புத் தன்மை அல்லது இரத்தச் சர்க்கரை பிரச்சனையின் அறிகுறியாக இருக்கலாம்.

**தொடர்ந்து துர்நாற்றமிக்க வாயு:** குடல் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டிருப்பதையும், நார்ச்சத்து குறைவையும் சுட்டிக்காட்டலாம்.

**குறட்டை மற்றும் வாய் வழி சுவாசம்:** தூக்கத்தில் மூச்சுத்திணறல் (Sleep Apnea) அல்லது சுவாசப்பாதை பிரச்சனைக்கான அறிகுறியாக இருக்கலாம்.

**நன்றாக தூங்கியும் மனச்சோர்வு:** இரத்தச் சர்க்கரை மாற்றம், தூக்கத் தரக் குறைவு அல்லது உடல் அழற்சியால் ஏற்படலாம்.

**சிறிய வேலைக்கும் மூச்சுத்திணறல்:** இதய நலம் அல்லது உடற்தகுதி குறைவாக இருப்பதற்கான முக்கிய அறிகுறியாக இருக்கலாம்.

**குறிப்பு:** இந்த அறிகுறிகள் இருந்தாலே நோய் இருப்பது உறுதி என்று அர்த்தமில்லை. ஆனால் அவை தொடர்ந்து இருந்தால் மருத்துவரை அணுகி பரிசோதனை செய்து கொள்வது நல்லது.

# 1 கோடி குடும்பங்களுக்கு சொந்த வீடு... மத்திய அரசின் புதிய சலுகை!



புதுடெல்லி, ஜூலை. 26–

சொந்த வீடு கனவை நனவாக்கும் வகையில், பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா (PMAY–U 2.0) திட்டத்தின் கீழ் அடுத்த 5 ஆண்டுகளில் 1 கோடி நகர்ப்புற குடும்பங்களுக்கு வீடு கட்ட உதவ மத்திய அரசு இலக்கு நிர்ண யித்துள்ளது. இந்தத் திட்ட த்தில் சொந்த நிலம் உள்ளவர்களுக்கு வீடு கட்ட நிதியுதவி, வீட்டு கடன் வட்டியில் மானியம், மானிய விலையில் அடுக்குமாடி குடியிருப்பு, குறைந்த வாடகை வீடுகள் உள்ளிட்ட 4 வகையான சலுகைகள் வழங்கப்படுகின்றன.

நகர்ப்புறங்களில் வீடு இல்லாதோர், குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள், பெண்கள், மாற்றுத்திறனாளிகள், முதியோர், திருநங்கைகள் உள்ளிட்ட தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம். தமிழ்நாட்டில் இதுவரை 6.86 லட்சம் வீடுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள நிலையில், 6.32 லட்சம் வீடுகள் பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

# பிரதமர் சாய்ஸ்! மத்திய கல்வித்துறை அமைச்சர் இவர்?




புதுடெல்லி, ஜூலை 26–

மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் தனது பதவியை ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, பிரதமர் நரேந்திர மோடியின் பரிந்துரையின் பேரில் அவரது ராஜினாமாவை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஏற்றுக்கொண்டார். புதிய மத்திய கல்வி அமைச்சராக பிரகலாத் ஜோஷி நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது நுகர்வோர் விவகாரம், உணவு மற்றும் பொது விநியோகம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உள்ளிட்ட துறைகளை கவனித்து வரும் அவர், இனி கல்வித் துறையையும் கூடுதலாக நிர்வகிப்பார்.

**யார் இந்த பிரகலாத் ஜோசி?**

63 வயதாகும் பிரகலாத் ஜோசி, ஏற்கனவே மத்திய அரசின் உணவுப்பொருள் வழங்கல் துறை மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சராக பதவியில் இருக்கிறார். இவருக்கு கூடுதல் பொறுப்பாக, கல்வித்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. கர்நாடகாவின் தார்வாட் மக்களவை தொகுதியிலிருந்து கடந்த 22 வருடங்களில் 5 முறை தேர்ந்தெடுக்கப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறார் பிரகலாத் ஜோஷி. இதற்கு முந்தைய பிரதமர் மோடியின் அமைச்சரவையில், நாடாளுமன்ற விவகாரங்கள், நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை அமைச்சராக பதவியில் இருந்திருக்கிறார்.

**ஜோசி தேர்வு செய்யப்பட்டது ஏன்?**

எத்தனையோ அமைச்சர்கள் இருக்கும் போது, பிரகலாத் ஜோஷிக்கு மட்டும் கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டது ஏன்? என்று மக்களுக்கு கேள்வி எழுந்துள்ளது. இவர், 2019 முதல் 2024 வரையிலான மத்திய ஆசின் நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சராக இருந்தவர். இவர், பிரச்சனைகளை திறம்பட கையாளக்கூடியவர் எனும் பெயர் பெற்றவராகவும் இருக்கிறார். எதிர்கட்சிகள் கேட்கும் கேள்விகளுக்கு, சரியான பதிலளிக்கும் திறன் இவருக்கு உண்டு என சொல்லப்படுகிறது. அரசியல் அனுபவம் + பிரச்சனைகளை தீர்க்கும் திறன் கொண்டவர் என்பதால், இவர் பிரதமர் மோடியின் விருப்பத்தேர்வில் இருந்ததாக கூறப்படுகிறது. இதன் அடிப்படையில்தான், அவருக்கு கல்வி அமைச்சகமும் கூடுதல் பொறுப்பாக வழங்கப்பட்டிருக்கலாம் என தகவல் வெளியாகி இருக்கிறது.

**பிரகலாத் ஜோசிக்கு இருக்கும் சவால்!**

நீட் தேர்வு வினாத்தாள் கசிவு விவகாரத்தில், மாணவர்களுக்கு தற்போதைய அரசாங்கம் மீது கடும் நம்பிக்கையின்மை ஏற்பட்டதன் காரணமாகத்தான், CJP–ன் போராட்டமானது இவ்வளவு பெரிதாக வெடித்தது. தற்போது புதிதாக மத்திய கல்வி அமைச்சகத்தை கையிலெடுத்திருக்கும் பிரகலாத் ஜோசிக்கு இருக்கும் மிகப்பெரிய சவால் இதுதான். மாணவர்களுக்கு நீட் தேர்வு நடத்தும் அரசாங்கத்தின் மீது ஏற்பட்டிருக்கும் நம்பிக்கையின்மையை போக்க வேண்டியது பிரகலாத் ஜோசி முதலில் சந்திக்கப்போகும் மிகப்பெரும் சவால்களில் ஒன்றாக இருக்கிறது. தற்போதைய இந்த நெருக்கடியையும் சமாளித்து, எதிர்காலத்திலும் இத்தேர்வில் எந்த குளறுபடியையும் நடக்க விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு அவரிடம் இருக்கிறது. இதை அவர் சிறப்பாக கையாளுவார் என்பதை நம்பிதான் அவரிடம் இந்த கூடுதல் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**பதவியேற்றவுடன் சொன்ன விஷயம்..**

பிரகலாத் ஜோசி, கல்வி அமைச்சர் பொறுப்பு வழங்கப்பட்ட பின், பிரதமர் நரேந்திர மோடி, தன் மீது நம்பிக்கை வைத்து இவ்வளவு பெரிய பொறுப்பை கொடுத்ததற்கு நன்றி கூறியதோடு, தன் மீது வைத்திருக்கும் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வேன் என்று கூறினார். மேலும், நேர்மை மற்றும் பணிவுடன் தன் கடமையை செய்வேன் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

# வேலை வாய்ப்பு

## ரயில்வேயில் 4,098 நிரந்தர வேலைவாய்ப்புகள்... ஆகஸ்ட் 14 முதல் விண்ணப்பம் தொடக்கம்!

அமைப்பின் பெயர்: ரயில்வே ஆட்சேர்ப்பு வாரியம் (Railway Recruitment Board – RRB)
அறிவிப்பு எண்: CEN 04/2026
வேலைவகை: மத்திய அரசு நிரந்தர பணி
பணியிடங்கள்:
Junior Engineer (JE)
Depot Material Superintendent (DMS)
Chemical & Metallurgical Assistant (CMA)
மொத்த காலிப்பணியிடங்கள்: 4,098
பணியிடம்: இந்தியா முழுவதும்
ஆன்லைன் விண்ணப்பம் தொடக்கம்: 14.08.2026
விண்ணப்பிக்க கடைசி நாள்: 13.09.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
தேர்வு முறை:
CBT I
CBT II
ஆவண சரிபார்ப்பு
மருத்துவ பரிசோதனை
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.rrbapply.gov.in/

## TNOGA–வில் அரசு வேலை... ஜூலை 31 வரை விண்ணப்பம்!

தமிழ்நாடு இணையவழி விளையாட்டு ஆணையம் (TNOGA) தனிப்பட்ட உதவியாளர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் ஆகிய 2 பணியிடங்களுக்கு விண்ணப்பங்களை வரவேற்றுள்ளது. ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு அல்லது தொடர்புடைய பொறியியல் பட்டம் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். எழுத்துத் தேர்வு இல்லை; நேர்காணல் மூலம் தேர்வு நடைபெறும். மாதச் சம்பளம் ரூ.20,000 முதல் ரூ.25,000 வரை வழங்கப்படும். விண்ணப்பங்களை தேவையான ஆவணங்களுடன் ஜூலை 31 மாலை 5 மணிக்குள் tnoga@tn.gov.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

# ஜூலை 31-க்குள் KYC முடிக்காவிட்டால் ரேஷன் பொருட்கள் கிடையாது!




சென்னை, ஜூலை. 26–

தமிழக ரேஷன் அட்டைதாரர்கள் அனைவரும் ஜூலை 31–க்குள் தங்கள் KYC (கைரேகை பதிவு) செயல்முறையை கட்டாயமாக நிறைவு செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

போலி ரேஷன் அட்டைகள் பயன்பாடு, இறந்தவர்களின் பெயரில் பொருட்கள் பெறுதல் போன்ற முறைகேடுகளை தடுக்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் அருகிலுள்ள ரேஷன் கடையில் கைரேகை பதிவு செய்ய வேண்டும். காலக்கெடுவுக்குள் KYC செய்யாதவர்கள் அடுத்த மாதங்களில் ரேஷன் பொருட்கள் பெறுவதில் சிக்கல் ஏற்படலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இறந்தவர்களின் பெயரை ரேஷன் அட்டையிலிருந்து நீக்காதவர்கள், வட்ட வழங்கல் அலுவலகம் அல்லது TNPDSஇணையதளம் மூலம் திருத்தம் செய்து கொள்ளலாம்.

# சினிமா துளிகள்..!

## ‘தி மாஸ்க்’ இயக்குநர் சக் ரஸ்ஸல் மறைவு... ஹாலிவுட் இரங்கல்!




‘தி மாஸ்க்’, ‘தி ஸ்கார்பியன் கிங்’ உள்ளிட்ட ஹாலிவுட் வெற்றிப் படங்களை இயக்கிய பிரபல இயக்குநர் சக் ரஸ்ஸல்(74) காலமானார். சான் டியாகோவில் உள்ள அவரது இல்லத்தில் மயங்கிய நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட அவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

1987–ல் இயக்குநராக அறிமுகமான அவர், 1994–ல் வெளியான ‘தி மாஸ்க்’ திரைப்படம் மூலம் ஜிம் கேரி மற்றும் கேமரூன் டயஸை உலகப் புகழ் பெற்ற நட்சத்திரங்களாக உயர்த்தினார். 2002–ல் வெளியான ‘தி ஸ்கார்பியன் கிங்’படத்தின் மூலம் டுவைன் ஜான்சனை கதாநாயகனாக அறிமுகப்படுத்தினார். அவரது மறைவுக்கு ஹாலிவுட் பிரபலங்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

## ஓடிடி–யில் ‘டாக் ஷோ’ நடத்தும் மாதவன்!




இந்தி தொலைக்காட்சியில், கடந்த 2000–ம் ஆண்டில் பிரபலமான டாக் ஷோ ‘ஜீனா இஸி கா நாம் ஹே’. ஜீ தொலைக்காட்சியில் வெளியான இதில் பாலிவுட் பிரபலங்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியை மறைந்த நடிகரும் புகழ்பெற்ற தொகுப்பாளருமான ஃபரூக் ஷேக் தொகுத்து வழங்கியிருந்தார். தற்போது புதிய வடிவில் இந்த டாக் ஷோ, ஜீ–5 ஓடிடி தளத்தில் மீண்டும் அறிமுகமாகிறது. ‘ஜீனா இஸி கா நாம் ஹே– 2.0’ என்று பெயரிடப்பட்டுள்ள இந்நிகழ்ச்சியை நடிகர் மாதவன் தொகுத்து வழங்குகிறார்.

# சுங்கச் சாவடிகளில் மீண்டும் கட்டண உயர்வு!



சென்னை, ஜூலை. 26–

தமிழகத்தில் மொத்தம் 7,000 கி.மீ. தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள 80 சுங்கச்சாவடிகளில், 66 சுங்கச்சாவடிகளில் கட்டணங்கள் ஓராண்டுக்கு ஒருமுறை ஏப்.1 முதல், மீதமுள்ள 14 சுங்கச்சாவடிகளில் செப்.1 முதல் திருத்தம் செய்யப்படும் நடைமுறை அமலில் உள்ளது. அதன்படி, இந்த ஆண்டு கட்டண உயர்வு அமலுக்கு வந்துள்ள நிலையில், கார், பேருந்து, லாரி உள்ளிட்ட அனைத்து வாகனங்களுக்கும் ரூ.5 முதல் ரூ.30 வரை சுங்கக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த கட்டண உயர்வால் வாகன ஓட்டிகள் கூடுதல் செலவைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதுடன், சரக்கு போக்குவரத்து செலவு அதிகரிப்பதால் அத்தியாவசிய பொருட்களின் விலையிலும் தாக்கம் ஏற்படலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது.

# எலும்பியல் புற்றுநோய் சிகிச்சை, நாராயணா ஹெல்த் சிட்டி மருத்துவமனை சாதனை!



ஈரோடு, ஜூலை. 26–

பெங்களூரு நாராயணா ஹெல்த் சிட்டி ரோபோடிக் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை, எலும்பியல் புற்றுநோய் அறுவை சிகிச்சை நிபுணர்கள் செய்தியாளர்கள் சந்திப்பு ஈரோட்டில் நடைபெற்றது.

முழங்காலில் ஏற்பட்ட Osteosarcoma என்ற தீவிர எலும்புப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 7 வயது சிறுமிக்கு, பெங்களூரு நாராயணா ஹெல்த் சிட்டி மருத்துவமனையில் வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. புற்றுநோய்க் கட்டி அகற்றப்பட்டதுடன், ஜெர்மனியில் தயாரிக்கப்பட்ட நீளத்தை அறுவைச் சிகிச்சையின்றி அதிகரிக்கக்கூடிய (Non–invasive Expandable Tumour Prosthesis) தனிப்பயன் செயற்கை மூட்டு பொருத்தப்பட்டது. அறுவைச் சிகிச்சைக்கு மூன்று ஆண்டுகள் கழித்தும் சிறுமி முழு நலத்துடன் இயல்பாக நடந்து வருவது மருத்துவமனையின் முக்கிய சாதனையாகும்.

# கூடலூர் குறிஞ்சி பகுதிக்கு நுழைய தடை!



நீலகிரி, ஜூலை. 26–

நீலகிரி மாவட்டம் கூடலூரில் பூத்துள்ள குறிஞ்சி பூக்களை பார்க்க பொதுமக்கள் செல்ல வேண்டாம் என்று வனத்துறை அறிவுறுத்தியுள்ளது. நாடுகாணி, கூடலூர், ஊசிமலை, ஓவேலி பகுதிகளில் நீலக்குறிஞ்சி மலர்கள் அதிக அளவில் பூத்துள்ளன; இந்த மலர்களைப் பறிப்பதோ அல்லது செடிகளைச் சேதப்படுத்துவதோ சட்டப்படி தண்டனைக்குரிய குற்றம். அந்த பகுதியில் காட்டு யானைகள் நடமாட்டம் இருப்பதால் பொதுமக்கள், சுற்றுலாப் பயணிகள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881

# உலக இயற்கை பாதுகாப்பு தினத்தையொட்டி மாரத்தான் போட்டி!



திருப்பூர், ஜூலை 26–

உலக இயற்கை பாதுகாப்பு தினத்தையொட்டி திருப்பூர் அடுத்த பெருமாநல்லூரில் அமைந்துள்ள கே.எம்.சி. சட்டக்கல்லூரி சார்பில் தொடர்ந்து நான்காவது ஆண்டாக பொதுமக்கள் மற்றும் இளைஞர்களிடையே சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நடைபெற்ற மாரத்தான் போட்டி மிகுந்த உற்சாகத்துடன் சிறப்பாக நடைபெற்றது.

சட்டக்கல்லூரி வளாகத்தில் இருந்து தொடங்கிய இந்த மாரத்தான் போட்டியை சதீஷ் துணை ஆட்சியர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அவர்கள, பெருமாநல்லூர் காவல் துணைக் கண்காணிப்பாளர் (டி.எஸ்.பி.) த இரா. குமார் காவல் ஆய்வாளர் திருமதி. அம்பிகா ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர். நிகழ்ச்சியில் கல்லூரியின் தாளாளர் இயற்கையைப் பாதுகாப்பதன் அவசிய த்தையும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் இயற்கை வளங்களைப் பேணுவது ஒவ்வொரு குடிமகனின் கடமை என்பதையும் வலியுறுத்திப் பேசினார். பெருமாநல்லூர் காவல் துணைக் கண்காணிப்பாளர் (டி.எஸ்.பி.) உடல்நலத்தைப் பேணுவதற்கு அனைவரும் தினமும் உடற்பயிற்சியில் ஈடுபட வேண்டும் என்றும், தொடர்ந்து உடற்பயிற்சி செய்வதன் மூலம் மருத்துவ உதவியை நாட வேண்டிய நிலை பெருமளவில் குறையும் என்றும் அறிவுறுத்தினார்.

இந்த மாரத்தான் போட்டியில் 500–க்கும் மேற்பட்டோர் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.


இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கே.எம்.சி. சட்டகல்லூரியின் தாளாளர் திருமதி. ஜி. அருணா ஸ்ரீதேவி, செயலாளர் செல்வி. ஜி. ஞான வர்ஷினி, கல்லூரி முதல்வர் திருமதி. சுமிதா நிஷார் செயல் அலுவலர் சசிகாந்த் மற்றும் பெருமாநல்லூர் ரோட்டரி சங்கம், போயம்பாளையம் ஸ்ரீ சரண் மெடிக்கல் சென்டர் மருத்துவமனை, கோவர்த்தனா நிறுவனம் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். மேலும், இந்த மாரத்தான் போட்டி சிறப்பாகவும் பாதுகாப்பாகவும் நடைபெற பெருமாநல்லூர் போக்குவரத்துக் காவல்துறையினர் சிறப்பான ஒத்துழைப்பையும் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் வழங்கினர். நிகழ்ச்சி வெற்றிகரமாக நடைபெற கல்லூரி பேராசிரியர்கள், அலுவலக பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் சிறப்பான ஒத்துழைப்பையும் அர்ப்பணிப்புடனான பணியையும் வழங்கினர்.



# இன்றைய கார்ட்டூன்




# சீனாவை அச்சுறுத்தும் 'நவுல்' புயல்: குவாங்டாங் கடலோரப் பகுதிக்கு 'ரெட் அலெட்ர்'!



சீனா, ஜூலை.26–

சீனாவின் தெற்கு கடலோரப் பகுதியை நோக்கி அதிவேகமாக நகர்ந்து வரும் 'நவுல்' (Typhoon Noul) புயல் காரணமாக, நாட்டின் தேசிய வானிலை மையம் மிக உயர்ந்த அபாய எச்சரிக்கையான 'சிவப்பு எச்சரிக்கையை' விடுத்துள்ளது. நடப்பு ஆண்டின் 12–வது புயலான இது, குவாங்டாங் மாகாணத்தின் கடலோரப் பகுதியில் தீவிரமாகத் தாக்கக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

**புயலின் மையம் :**

சீன தேசிய வானிலை மையத்தின் (NMC) தகவல்படி, புயலின் மையம் குவாங்டாங் மாகாணத்தின் ஹுய்ஜோ நகருக்கு உட்பட்ட ஹுய்ஜோங் பகுதிக்கு தென்கிழக்கே சுமார் 100 கி.மீ தொலைவில் கடலில் மையம் கொண்டுள்ளது. இது வடமேற்கு திசையை நோக்கி மணிக்கு 20 கி.மீ வேகத்தில் நகர்ந்து வருகிறது.

**காற்றின் வேகம்:**

புயல் மையத்திற்கு அருகே சுழன்றடிக்கும் காற்றின் வேகம் 'ஃபோர்ஸ் 14' (Force 14–சுமார் மணிக்கு 150 கி.மீ–க்கும் மேல்) என்ற அளவில் மிகத் தீவிரமாக உள்ளது. கரையை நெருங்க நெருங்க இதன் வீரியம் மேலும் அதிகரிக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

**ஹாங்காங்கில் அவசரநிலை:**

புயல் நெருங்குவதை அடுத்து, ஹாங்காங் அரசு உடனடியாக அவசரகால நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது. முன்னெச்சரிக்கையாக 410–க்கும் மேற்பட்ட விமான சேவைகள் மற்றும் 150–க்கும் மேற்பட்ட அதிவேக ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. உள்துறை நிர்வாகம் சார்பில் பொதுமக்களுக்காக 28 அவசரகால நிவாரண முகாம்கள் திறக்கப்பட்டுள்ளன.


**அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:**

சீனாவின் வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் வறட்சி நிவாரண தலைமையகம், குவாங்டாங் மாகாணத்திற்கான அவசரகாலப் பாதுகாப்பு நிலையை 'லெவல் III' ஆக உயர்த்தியுள்ளது. மேலும், அருகில் உள்ள ஜியாங்சி மற்றும் ஹுனான் மாகாணங்களுக்கு 'லெவல் IV' வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**வானிலை நிலவரம்:**

நவுல் புயல் குவாங்டாங் கடலோரப் பகுதியில் கரையைக்கடந்த பிறகு, வடமேற்கு மற்றும் வடக்கு–வடமேற்கு திசையை நோக்கி நகர்ந்து படிப்படியாக வலுவிழக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இதன் தாக்கத்தால் ஃபூஜியான், ஜியாங்சி, ஹெனான், ஹுபெய், ஹுனான், குவாங்டாங் மற்றும் குவாங்சி ஆகிய தென் மற்றும் மத்திய சீன மாகாணங்களில் பலத்த சூறாவளிக் காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

# கோஷ்டிகள் இருந்தால்தான் காங்கிரஸ் கட்சி வளரும்: திருநாவுக்கரசர் பரபரப்பு பேச்சு!



சென்னை, ஜூலை. 26–

மூத்த தலைவரான திருநாவுக்கரசர் 'எல்லோரும் தங்கள் படங்களையும், தங்களுக்கு பிடித்தமான நிர்வாகிகள் படங்களையும் போட்டுக் கொள்வதில் தவறில்லை. கட்சியில் கோஷ்டி இருப்பது நல்லதுதான். அதனால்தான் கட்சியும் வளருகிறது என்று மாவட்ட தலைவர்கள் பயிற்சி முகாமில் பேசி இருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

காங்கிரஸ் மாவட்ட தலைவர்களுக்கான 10 நாள் பயிற்சி முகாம் மகாபலிபுரத்தில் நடந்து வருகிறது. 3–வது நாளான நேற்று திருநாவுக்கரசர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு மாவட்ட தலைவர்கள் மத்தியில் உரையாடி இருக்கிறார். அப்போது அவர் காங்கிரஸ் கட்சியில் கோஷ்டிகள் இருக்கத்தான் செய்யும்.

யார் யாருக்கு யாரை பிடிக்கிறதோ அவர்களை போய் பார்ப்பார்கள். அவர்கள் மூலம் கல்லூரியில் ஒரு அட்மிஷன், போலீஸ் நிலைய விவகாரம், அரசு அலுவலகங்களில் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது என்று வேலைகள் நடக்கும். இதன் மூலம் கட்சியும் வளரும். யாரும் யாரையும் பார்க்க கூடாது. யாருடனும் பேசக்கூடாது. இந்த படங்களை போடக்கூடாது என்பதெல்லாம் நடைமுறையில் சாத்தியப்படாது. காங்கிரசில் காந்தி காலத்திலும் கோஷ்டி இருந்து இருக்கிறது. காமராஜர் காலத்திலும் இருந்து இருக்கிறது. இது தவிர்க்க முடியாதது. அப்படி ஒவ்வொரு தலைவர்களுக்கும் ஆதரவு கூட்டம் பெருக பெருகதான் கட்சியும் வளர்ந்து இருக்கிறது.

போஸ்டர்களில் படங்கள் போடுவது பற்றி எம்.ஜி.ஆர். சொல்வார் 'என்னை எல்லோருக்கும் தெரியும். உங்கள் படங்களையும் போட்டு அச்சிடுங்கள். அப்போதுதான் நீங்களும் மக்கள் மத்தியில் பிரபலமாவீர்கள். உங்களை மக்கள் அறிந்து கொள்வார்கள்' என்பார்.

நீங்களும் ராகுல் படத்தை எவ்வளவு பெரிதாக வேண்டுமானாலும் போட்டு கொள்ளுங்கள். மாநில தலைவர் படத்துடன், மாவட்ட தலைவர்கள் படம் முதல் ஒன்றிய தலைவர்கள் படங்கள் வரை போடுங்கள். அப்போதுதான் மக்கள் மத்தியிலும் நீங்கள் அறி முகம் ஆவீர்கள். அதிகாரிகள் மத்தியிலும் அறிமுகம் ஆவீர்கள்.

அவ்வாறு அறிமுகம் ஆகி இருந்தால்தான் மக்கள் பிரச்சினைகளுக்காக நீங்கள் அதிகாரிகளை சந்தித்து பேச முடியும். பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். இப்படி மக்களுக்கு ஏதாவது செய்து கொடுத்தால்தான் மக்கள் உங்கள் பக்கம் நிற்பார்கள். கட்சியும் வளரும். பூத் லெவலில் இருக்கும் கடை நிலை நிர்வாகிகள் வரை கட்சியை வளர்ப்பதில் தீவிரம் காட்ட வேண்டும். இப்படி கட்டமைப்பை தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் அனைத்து மட்டங்களிலும் பலமாக வைத்துள்ளது. அதே போல் நீங்களும் கட்டமைப்பை பலப்படுத் துங்கள்' என்றார்.

காங்கிரஸ் மாநில கமிட்டி கட்டுப்பாடுகள் விதித்து வரும் நிலையில் திருநாவுக்கர சர் இவ்வாறு பேசியது மாவட்ட தலைவர்கள் மத்தியில் புதிய உற்சாகத்தை ஏற்படுத்தி இருப்பதாக கூறினார்கள்.

# திருச்செந்தூர் கோவிலில் 5 மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம்!

திருச்செந்தூர் கோவிலில் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாள் என்பதால் தமிழகம் மட்டுமின்றி கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கோவிலில் குவிந்தனர். அவர்கள் அதிகாலையில் இருந்தே கடல் மற்றும் நாழிக்கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி நீண்ட வரிசையில் சுமார் 5 மணி நேரம் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.

பக்தர்கள் வாகனங்கள் வருகையால் திருச்செந்தூர் நகர் பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. பெரும்பாலான சுற்றுலா பயணிகள் வாகனங்கள் தெப்பக்குளம் அருகில் நிறுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் சாலையில் இரு பக்கமும் நீண்ட வரிசையில் வாகனங்கள் அணிவகுத்து நின்றன. ஞாயிறு விடுமுறை நாளான இன்று வழக்கம் போல் கோவில் நடை அதிகாலை 4 மணிக்கு திறக்கப்பட்டது.

# சிரியா: ராணுவ வீரர்கள் சென்ற பேருந்துடன் பயணிகள் பேருந்து விபத்து - பலி 35!



சிரியா, ஜூலை. 26–

மத்திய சிரியாவில் உள்ள பால்மைரா மற்றும் அல் சுக்னா நகரங்களுக்கு இடையிலான பாலைவன நெடுஞ்சாலைப் பகுதியில் நேற்று இந்த விபத்து நடந்துள்ளது.

சாலையில் எதிரெதிரே வந்த இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதிக்கொண்டன. விபத்துக்குள்ளான இரு பேருந்துகளில் ஒன்று சிரிய நாட்டின் உள்நாட்டுப் பாதுகாப்புப் படை வீரர்களை ஏற்றிச் சென்ற பேருந்தாகும். மற்றொன்று பொதுமக்கள் பயணித்த பேருந்தாகும்.

இந்த விபத்தில் குறைந்தது 35 பேர் உயிரிழந்தனர் மற்றும் 30க்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர்.

சிரியாவின் செய்தி நிறுவனமான சனா தகவல்களின்படி, விபத்து நடந்தவுடன் மீட்புக் குழுவினரும் ஆம்புலன்ஸ்களும் சம்பவ இடத்திற்கு விரைந்தன. படுகாயமடைந்தவர்களை விரைவாக மீட்டு சிகிச்சை அளிப்பதற்காக பல ராணுவ ஹெலிகாப்டர்கள் சம்பவ இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

காயமடைந்தவர்கள் பால்மைரா விமான நிலையத்திலிருந்து வான்வழியாக ஹோம்ஸ் ராணுவ மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

# கேரள லாட்டரி தமிழகத்துக்கு கடத்தப்படுகிறதா?



பாலக்காடு, ஜூலை. 26–

தமிழ்நாட்டில் லாட்டரி சீட்டுக்கு தடை விதிக்கப்பட்டு உள்ளதால் லாட்டரி சீட்டுகளை வைத்திருப்பதும் விற்பனைக்காக கொண்டு செல்வதும் சட்டவிரோதமாகும். லாட்டரி சீட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டால் உடனடியாக அபராதம் விதிக்கப்படும். அதிக அளவில் லாட்டரி சீட்டு களுடன் பிடிபடுவோருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்படும் என்று போலீசார் எச்சரித்துள்ளனர்.

# தூத்துக்குடி பனிமய மாதா பேராலயத் திருவிழா கொடியேற்றத்துடன் தொடக்கம்!



தூத்துக்குடி, ஜூலை. 26–

தூத்துக்குடி உலகப் புகழ்பெற்ற தூய பனிமய மாதா பேராலயத்தின் 444 வது ஆண்டுத் திருவிழா ஞாயிற்றுக்கிழமை (ஜூலை 26) கொடியேற்றத்துடன் தொடங்கியது.

காலை 7 மணியளவில் சிறப்புத் திருப்பலி நடைபெற்றது. இந்த திருப்பலி முடிந்ததும் அருள்தந்தைகள் ஊர்வலமாக கொண்டுவந்த தூய பனிமயமாதா உருவம் பொறித்த கொடி பேராலயம் எதிரே உள்ள கொடிமரத்தில் ஏற்றப்பட்டது.

அப்போது அங்கு கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் 'மரியே வாழ்க' என முழக்கமிட்டனர். மேலும், புறாக்கள் மற்றும் பலூன்கள் பறக்கவிட்டு கைகளைத் தட்டி தங்கள் மகிழ்ச்சியினை வெளிப்படுத்தினர்.

தூத்துக்குடி கடற்கரை சாலையில் அமைந்துள்ள உலகப் புகழ்பெற்ற தூய பனிமய மாதா பேராலயத் திருவிழா ஆண்டுதோறும் ஜூலை 26 இல் தொடங்கி ஆகஸ்ட் 5 ஆம் தேதி வரை 10 நாள்கள் நடைபெறும்.

திருவிழா நாள்களில் உலக நன்மை, உலக சமாதானம், மாணவர்–மாணவிகள் கல்வி மேன்மை, வியாபாரிகள், மீனவர்கள், பனைத் தொழிலாளர்கள், உப்பளத் தொழிலாளர்கள் என அனைத்துத் தரப்பினருக்குமான சிறப்பு திருப்பலிகள், நற்கருணை பவனி நடைபெறும். 10 ஆம் நாள் விழாவில் நகர வீதிகளில் பனிமய அன்னையின் திருவுருவ தேர் பவனி நடைபெறும். வரும் ஆகஸ்ட் 5 ஆம் தேதி தேர் பவனி நடைபெற உள்ளதால் அன்று தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பாமகவில் புதிய நகர்வு? தமிழகத்தில் என்.ஆர்.காங்கிரஸ்?



புதுச்சேரி, ஜூலை 26–

தமிழகத்தில் என்.ஆர். காங்கிரஸ் கட்சியை விரிவு படுத்தும் நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ள நிலையில், முன்னாள் பாமக எம்.எல்.ஏ. அருள் கடந்த வெள்ளிக்கிழமை புதுச்சேரி முதல்வர் என். ரங்கசாமியை சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

அதைத் தொடர்ந்து, பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸின் மகள் காந்திமதி மற்றும் அவரது மகன் முகுந்தன் ஆகியோர் சனிக்கிழமை முதல்வர் ரங்கசாமியை நேரில் சந்தித்து பேசினர்.

சந்திப்புக்குப் பிறகு முகுந்தன் கூறுகையில், முதல்வர் ரங்கசாமியின் எளிமையான வாழ்க்கை முறை, வெளிப்படையான நிர்வாகம் மற்றும் மக்கள் நலத் திட்டங்கள் தம்மை வெகுவாக ஈர்த்துள்ளதாக தெரிவித்தார். மேலும், தமிழகத்தில் என்.ஆர். காங்கிரஸ் கட்சியின் செயல்பாடுகள் மற்றும் அதன் விரிவாக்கம் தொடர்பாகவும் கருத்துகள் பரிமாறப்பட்டதாக கூறப்படுகிறது.

முன்னாள் பாமக எம்.எல்.ஏ. அருளின் வெள்ளிக்கிழமை சந்திப்பைத் தொடர்ந்து, ராமதாஸ் குடும்பத்தினரின் சனிக்கிழமை சந்திப்பு நடைபெற்றிருப்பது தமிழகம் மற்றும் புதுச்சேரி அரசியல் வட்டாரங்களில் புதிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.காந்திமதி அல்லது முகுந்தன் என்.ஆர். காங்கிரஸில் இணைந்ததாக எந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பும் வெளியாகவில்லை. இந்தச் சந்திப்பு அரசியல் ஆலோசனை மற்றும் கட்சி விரிவாக்கம் தொடர்பானதாக மட்டுமே தகவல்கள் வெளியாகியுள்ளன.



மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், தாணிப்பாறையில் அருள்மிகு சுந்தரமகாலிங்கம் திருக்கோயில் ஆடி அமாவாசை திருவிழா முன்னேற்பாடு பணிகள் தொடர்பான கூட்டம் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா ஆகியோர் தலைமையில் தொடர்புடைய அலுவலர்களுடன் நடைபெற்றது.

# 10 கிலோ எரிவாயு சிலிண்டர் அறிமுகம்! 4 மணி நேரத்தில் விநியோகம்!!



புதுடெல்லி, ஜூலை. 26–

இந்தியன் ஆயில் நிறுவனம் சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:–

பொதுமக்களின் தேவைகளைக் கருத்தில்கொண்டு இந்தியன் ஆயில் நிறுவனம் 'இண்டேன் எக்ஸ்ட்ராலைட் நவ்', என்ற இலகுரக, துருப்பிடிக்காத சிலிண்டரை அறிமுகப்படுத்தியுள்ளது. இது வாடிக்கையாளர்களுக்கு அதிக வசதி, பாதுகாப்பு கொண்டதுடன், எரிவாயு இருப்பை எளிதாகக் கண்காணிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த வகை சிலிண்டர்கள் முன்பதிவு செய்த 4 மணி நேரத்துக்குள் விநியோகம் செய்யப்படும். வாடிக்கையாளர்கள் விரும்பும் நேரத்தில் விநியோகம் மற்றும் குறைந்த ஆவண நடைமுறைகள் உள்ளிட்ட சிறப்பம்சங்களும் உள்ளன.

சென்னையில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் 10 கிலோ மற்றும் 5 கிலோ எடை கொண்ட வீட்டு உபயோக எரிவாயு சிலிண்டர் சேவையை அந்த நிறுவனத்தின் தலைவர் ஏ.எஸ்.சாஹ்னே அறிமுகப்படுத்தினார்.

அப்போது பேசிய அவர், 'இண்டேன் எக்ஸ்ட்ராலைட் நவ்' மேம்பட்ட சிலிண்டர் தொழில்நுட்பத்தையும், தடையற்ற, மேம்பட்ட சேவை முறையையும் இணைத்து பாதுகாப்பான எல்பிஜி சிலிண்டரை அறிமுகப்படுத்தியுள்ளது. எதிர்காலத்துக்கேற்ற எரிசக்தி தீர்வுகளை வழங்குவதிலும், வாடிக்கையாளர் சேவையில் புதிய தரநிலைகளை உருவாக்குவதிலும் இந்தியன் ஆயில் உறுதியாக செயல்படுகிறது.

முதல் கட்டமாக புணே, குருகிராம், இந்தூர், கோவை ஆகிய நகரங்களில் இந்த வகை சிலிண்டர்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. தொடர்ந்து ஆகஸ்ட் மாதத்தில் இருந்து மேலும் 25 நகரங்களுக்கும், அக்டோபர் இறுதிக்குள் நாட்டின் முக்கிய நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்றார் அவர்.

வாடிக்கையாளர்கள் செயலி, இணையதளம் மூலம் புதிய இணைப்புகளைப் பெறவும், முன்பதிவும் செய்ய முடியும். விரைவில் 75888 88824 என்ற வாட்ஸ்ஆப் எண்ணின் மூலமும் முன்பதிவு வசதி அறிமுகப்படுத்தப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் இந்தியன் ஆயில் நிறுவனத்தின் இயக்குநர் (மார்க்கெட்டிங்) சௌமித்ரா பி. ஸ்ரீவஸ்தவா மற்றும் நிறுவனத்தின் மூத்த அதிகாரிகள் பங்கேற்றனர்.

# உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப்பில் முதல் இந்தியராக சாம்பியனான அனாஹத் சிங்!




புதுடெல்லி, ஜூலை. 26–

உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப்பில் முதல்முறையாக கோப்பை வென்ற இந்தியராக அனாஹத் சிங் வரலாறு படைத்துள்ளார். கனடாவின் ஒன்டாரியோ நகரில் உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்று வருகிறது. மகளிர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை அனாஹத் சிங்கும்– எகிப்தின் ருக்கையா சலீமும் மோதினார்கள். இந்தப் போட்டியில் 11–3, 11–7, 11–9 என 3–0 கேம்களில் அனாஹத் சிங் வென்று மகளிரில் சாம்பியனாக வெற்றி பெற்றார். கடந்தாண்டு அனாஹத் சிங் வெண்கலம் வென்றிருந்தார். கடந்த 2005–இல் ஜாம்பவான் ஜோஷ்னா சின்னப்பா அப்போது உலக ஜூனியர் ஸ்குவாஷ் இறுதிக்கு தகுதி பெற்றிருந்தார். அதன்பின் தற்பது 21 ஆண்டுகள் கழித்து அனாஹத் இச்சிறப்பை பெற்றுள்ளார்.

ஜோஷ்னா சின்னப்பாவும் நிகழ்தாத சாதனையை அனாஹத் சிங் நிகழ்த்தியுள்ளார். முதல் இந்தியராக உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப்பில் சாம்பியனாகி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார். ஆடவர் பிரிவில் 16 முறையும் மகளிர் பிரிவில் 17 முறையும் சாம்பியனான எகிப்து ஆதிக்கம் செலுத்தி வந்தனர். 16 ஆண்டுகளுக்குப் பிறகு எகிப்து அல்லாத ஒருவர் இதில் சாம்பியன் பட்டம் வென்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020